# சட்டத்திற்குப் புறம்பான
# அறிவிக்கப்படாத
# கட்டுப்பாடு இல்லாத
# மீன்பிடிப்பை நிறுத்துதல்



# சட்டத்திற்குப் புறம்பான
# அறிவிக்கப்படாத கட்டுப்பாடு இல்லாத மீன்பிடிப்பை
# நிறுத்துதல்

ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு
ரோம், 2002

இவ்வெளியீட்டில் பயன்படுத்தப்பட்ட பெயர்க் குறிப்புகளும் அளிக்கப்பட்ட தகவல்களும் ஒரு நாட்டின் சட்டமுறையான தகுதிநிலை,பெருநிலப் பகுதி, நகரம் அல்லது பகுதியினை பற்றியோ, பிறநாட்டுடனான அந்நாட்டின் எல்லைக்கோடு அல்லது எல்லையை பற்றியோ, ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் சார்பாக குறிப்பாக எதுவும் சுட்டிக்காட்டப்படவில்லை.

அனைத்து உரிமைகளும் பதிப்பகத்தார்க்கே. இப்பதிப்பிலிருந்து எப்பகுதியையும் உரிமையாளரின் முன் அனுமதியின்றி, பதிப்பிடவோ, நினைவில் கொள்ள பதிப்பில் சேமிக்கவோ, புகைப்படம், மின்னணு இயந்திரவியல் அல்லது பிற வழிகளில் அனுப்புதலோ கூடாது. அத்தகைய அனுமதிக்கு நோக்கம் மற்றும் விபரம் குறித்த அறிவிக்கையுடன் இயக்குநர் தகவல் பிரிவு ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு, வியாலே, டொமே டி , காரகல்லா 00100, ரோம், இத்தாலி என்ற முகவரிக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

© உவேஅ 2002


*முகப்பு அட்டை ஓவியம் – இமானுலே டி அந்தோனி*

*வங்காள விரிகுடா திட்டத்தின் மூலம்*
*தமிழில் மொழிபெயர்த்து அச்சடிக்கப்பட்டது*
*சனவரி 2007*

*மொழிபெயர்ப்பு: டாக்டர் ம பரமசிவம்*

*Tamil translation by Dr M Paramasivam*

*Translated and Printed by the Bay of Bengal Programme*
*Inter-Governmental Organisation*
*January 2007*



# சட்டத்திற்குப் புறம்பான அறிவிக்கப்படாத கட்டுப்பாடு இல்லாத மீன்பிடிப்பை நிறுத்துதல்

மீன்வளம் உலகம்முழுவதிலும் மக்களுக்கு உணவு, வேலைவாய்ப்பு, வருமானம் மற்றும் பொழுதுபோக்கு ஆகியவற்றிற்கு ஒரு முக்கியமான ஆதாரமாக விளங்குகிறது. தங்கள் பிழைப்பிற்காக இலட்சக்கணக்கான மக்கள் மீன்களை சார்ந்துள்ளனர். நிகழ்காலம் மற்றும் வருங்கால சந்ததியினருக்குத் தேவையான மீன் இருக்க வேண்டும் எனில், மீன் பிடிப்பில் உள்ள ஒவ்வொருவரும் உலகமீன்வளத்தைப் பாதுகாக்க மற்றும் நிர்வகிக்க உதவ வேண்டும்.

இந்த சூழ்நிலையை கருத்தில் கொண்டு ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் 170க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் 1995ல் பொறுப்பார்ந்த மீன்பிடிப்பிற்கான நடத்தைவிதித் தொகுப்பை எடுத்துக் கொண்டனர். இந்த தொகுப்பு கட்டாயம் என்பதை விட தன் ஆர்வமானது. மீன் வளத்தில் ஈடுபட்டுள்ள அல்லது பணிசெய்யும் ஒவ்வொருவரையும் இந்தத் தொகுப்பு கருத்தில் கொண்டுள்ளது.

இந்தத் தொகுப்பைப் பின்பற்றுதல் மற்றும் தொகுப்பு எற்படுத்தியுள்ள முன்னேற்றம் ஆகியவற்றைத் தவிர்த்து பொறுப்பார்ந்த முறையில் அனைத்து மீன் பிடிப்பு நடவடிக்கைகளும் நடைபெறுவது இல்லை. தொகுப்பில் கூறப்பட்ட விதித்தொகுப்புகளையும் சில மீன்பிடிப்போர் மதிப்பது இல்லை. உதாரணமாக மீன்பிடிப்பு பகுதிகள் மற்றும் மீன்பிடி சாதனங்கள் குறித்த விதிகளை சில மீன்பிடிப்போர் மதிப்பதில்லை. சிலர் தாங்கள் பிடித்த மீன்களைப் பற்றி அறிவிப்பது இல்லை (அல்லது தவறாக அறிவிக்கின்றனர்). சில மீன்பிடிகலன்களின் சொந்தக்காரர்கள் போதுமான வகையில் மீன்பிடிப்பை கண்காணிக்க விரும்பாத அல்லது இயலாத நாடுகளில் தங்கள் கலன்களுக்கு மறுகொடி இடுகின்றனர். (அதாவது தங்களின் கொடிகளை மாற்றி விடுகின்றனர்.) இதனைப்போன்ற பொறுப்பற்ற மீன்பிடி நடவடிக்கைகள் சீரான முறையில் மீன் வளத்தை நிர்வகிக்கும் முயற்சிகளை நேரடியாக வலிவு அற்றதாக்கிவிடும்.

''சட்டத்திற்குப்புறம்பானது அறிவிக்கப்படாதது மற்றும் கட்டுப்பாடு இல்லாத மீன்பிடிப்பு'' (சஅுக) என்ற வார்த்தை அத்தகைய பல்வேறான பொறுப்பற்ற மீன்பிடிப்பை விளக்குவதற்காகவே தோன்றியுள்ளது. இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட மேலான முயற்சியின் காரணமாக உவே அமைப்பின் உறுப்பினர்கள் ச.அ.க மீன்பிடிப்பை பாதுகாக்க, தவிர்க்க, நிறுத்திட, இப்பிரச்சனையை விளக்க, 2001ல் பன்னாட்டு செயல் திட்ட நடவடிக்கையினை (பசெதிந– சஅக) எற்படுத்தினர்.

நடத்தை விதித்தொகுப்பைப் போன்று பசெதிந– சஅக தன் விருப்பம் ஆனதே சாதனப்பெட்டியாக கருத்துரு உருவாக்கப்பட்டது. அதாவது பல வழிகளில் நடைபெறும் சஅக இல்லாத மீன்பிடி முறைகளை சமாளிப்பதற்கு பயன்படும் சாதனங்களின் தொகுப்பாகும். எல்லாசூழ்நிலைகளிலும் பயன்படுத்துவதற்கு பெட்டியில் உள்ள அனைத்து சாதனங்களும் பொருத்தமானவை அல்ல. மீன்வளத்தில் குறிப்பிட்ட சூழ்நிலைக்கு ஏற்றவாறு சாதனத்தைத் தேர்ந்து எடுக்க வேண்டும்.

இப்புத்தகம் கருதும் செயல்பாடுகள்

- உவே அமைப்பின் உறுப்பினர்கள் மற்றும் பிறருக்கு சாதனங்களை பழக்கப்படுத்திக் கொள்ள உதவுதல்
- குறிப்பிட்ட சூழ்நிலையில் எத்தகைய சாதனத்தை உபயோகிப்பது என்பதனைக் குறிப்பிடுதல்
- திறன்பட சாதனங்களை எவ்வாறு உபயோகிப்பது என்பதற்கு வழி முறைகளை வழங்குதல்

பசெதிந– சஅக பற்றி மேலும் தகவல்கள் தெரிந்து கொள்ளவும் நகல் பெறவும் விரும்புவோர் வலை தளத்தில் உவே அமைப்பின் மீன்துறை இணைய தளத்தின் மூலம் அணுகலாம். உவே அமைப்பின் மீன்துறை பிறர் பசெதிந– சஅக நிறைவேற்ற அரசு மற்றும் பிறருக்கு உதவுவதற்காக தொழில்நுட்ப வழிமுறைகளை ஏற்படுத்தி உள்ளது.

ப.செ.தி.ந. - ச. அக தொடர்பான இணைய தள முகவரி

http://WWW.fao.org/DOCREP/003/X6729e/X6729e00.HTM

வலை தளம் மூலம் அடைய முடியவில்லை என்றால் நகல் பெற கீழ்க்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ள வேண்டும்.

The Service Chief, FIPL/Fisheries Department, Food and Agriculture Organization, Viale Delle Terme di Caracalla, 00100 Rome, Italy.

.செ.தி.ந. - ச. அக நகல் ஆங்கிலம், பிரெஞ்சு, ஸ்பானிஷ், அரபிக், சீன மொழிகளில் கிடைப்பதால் எம்மொழியில் பெற வேண்டும் என்பதனை குறிப்பாகக் கூறுதல் வேண்டும்.

**பின்னணி**

சஅுக மீன்பிடிப்பு உண்மையாக எல்லா மீன்வளங்களிலும் நடைபெறுகிறது மீன்வளத்தை சரியாக நிர்வகிக்க முயல்வோருக்கும், உணவு மற்றும் வேலை வாய்ப்புக்காக மீன்வளத்தை ச் சார்ந்து இருப்போருக்கும் இது பிரச்சனைகளை ஏற்படுத்துகிறது. சஅுக மீன்பிடிப்பு மீன்வளத்தை முழுதுமாக வீழ்ச்சி அடையச் செய்கிறது.

ச அ க மீன்பிடிப்பு நடத்துபவர்கள் பொறுப்புடன் நடந்து கொள்ள மாட்டார்கள் அவர்கள் மீன்பிடிப்பு விதிகளைப் புறக்கணித்து பொறுப்பார்ந்த மீன் பிடிப்போருக்கு (அதாவது விதிகளுக்கு உட்பட்டு மீன்பிடிப்போர்) மேல் நேர்மையற்ற முறையில் பயன்பெறுவர்


சஅுக மீன்பிடிப்பு எந்த அளவில் உண்மையில் நிகழ்கிறது என்பதனை ஒருவரும் அறிந்திருக்க மாட்டார்கள். சில முக்கிய மீன்வளத்தில் மொத்த மீன்பிடிப்பில் பெரும் சதவிகிதம் சஅுக மீன்பிடிப்பால் பெறப்படுகிறது என்பதனை நாமும் அறிவோம். உலக அளவில் சஅுக மீன்பிடிப்பின் அளவு அதிகரித்து வருவது கவலை தருகிறது. வளர்ந்து வரும் மீன் இருப்பு, எண்ணிக்கை கீழிறங்குவதை (அதாவது பிடிக்கப்பட்ட மீனின் அளவு வீழ்ச்சியடைவதை) குறைப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட கடுமையான மீன்பிடிப்பு விதிகளைத் தவிர்க்க சஅுக மீன்பிடிப்போர் முயற்சி செய்கின்றனர்.

தனியாகவோ அல்லது பிறநாடுகளுடன் இணைந்தோ நாடுகள் சஅுக மீன்பிடிப்போடு போராடுவதற்கு உபயோகிக்க பல சாதனங்களை ப.செ.தி.ந.-ச.அ க அளிக்கிறது சில சாதனங்கள் அனைத்து நாடுகளிலும் உபயோகிப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளன. உபயோகத்திற்கான பிறசாதனங்கள் ஆவன :

- கொடி நாடுகள் (மீன்பிடிகலன்களை பதிவு செய்யும் நாடுகள் மற்றும் தங்கள் கொடிகளை கலன்களில் பறக்கவிட அனுமதிக்கும் நாடுகள்)
- கடலோர நாடுகள் (கடற்கரையை எல்லையாகக் கொண்ட நாடுகள்) மற்றும்
- துறைமுக நாடுகள் (மீன்பிடிகலன்கள் வந்து அடையும் துறை முகத்தைக் கொண்ட நாடுகள்)

ப.செ.தி.ந.-ச.அ க மீன்பிடிப்பு பன்னாடுகளில் அங்கீகரிக்கப்பட்ட சந்தை குறித்தான வழிமுறைகளை உபயோகிக்க கோருகிறது. ச.அ.க மீன்பிடிப்போர் பிடித்த மீன்களை விற்கவோ அல்லது வர்த்தகம் செய்யவோ இயலாதவாறு ஒதுக்குவது வடிவமைக்கப்பட்ட சாதனமாகும்.

இத்தகைய பலவகை சாதனங்களை இந்த புத்தகம் கீழ்க்கண்ட பிரிவுகளில் விளக்குகிறது.



## அனைத்து நாடுகளின் பொறுப்புகள்

மீன்பிடிப்பை ஒழுங்கு படுத்த சமீபத்திய பன்னாட்டு ஆவணங்களில் உள்ள விதிகளைப் பின்பற்றுவது அனைத்து நாடுகளின் முதல் கடமையாகும். பெரும்பான்மையான விதிகள் நடத்தை விதித்தொகுப்பில் உள்ளன. மற்றவற்றை பிற தன்னார்வ சாதனங்களிலும் மற்றும் பல ஒப்பந்தங்களிலும் (சட்டத்தை அமுல்படுத்தும் நாடுகளுக்கு இடையேயான கருத்து ஒற்றுமை) காணலாம். ஒப்பந்தங்களுக்கு கட்டுப்பட இதுவரை சம்மதிக்காத நாடுகள் விரைவாக சம்மதிக்க வேண்டும். இத்தகைய ஒப்பந்தங்களுக்கான சம்மதம் உலகம் முழுவதும் மீன்வளப்பாதுகாப்பு மற்றும் மேலாண்மையை மேம்படுத்தும்.


பல கடல் மீன்வளங்கள் மண்டல மீன்வள நிறுவனங்களால் கட்டுப்படுத்தப்படுகின்றன. அத்தகைய மீன்பிடிப்பில் ஈடுபடும் கலன்களைக் கொண்ட நாடுகள் அந்த நிறுவனங்களின் உறுப்பினர்களாக உடனடியாக சேர வேண்டும் அல்லது அத்தகைய நிறுவனங்களால் ஏற்படுத்தப்பட்ட விதிமுறைகளை வலிவு அற்றதாக ஆக்காத வழியில் தங்கள் கலன்களை மீன்பிடிக்க செய்தல் வேண்டும்.

முன்னுரிமை அடிப்படையில் ப.செ.தி.ந.-ச.அ க ல் உள்ள அனைத்து பொருத்தமான சாதனங்களையும் அவர்கள் பயன்படுத்துவதற்கு ஏதுவாக அந்த நாட்டின் மீன்பிடிப்பு சட்டங்களும் முறைகளும் உள்ளனவா என்பதனை மறு ஆய்வு செய்ய வேண்டும். கீழ்க்கண்டபடி ஆய்வு வினாக்களை எழுப்ப வேண்டும்:

- பசெதிந–சஅக பரிந்துரைகளை செயல்படுத்த கூடுதலாக சட்ட ஆணையம் தேவையா ?
- சஅக மீன்பிடிப்பிற்கு தற்சமயம் விதிக்கப்படும் தண்டனைகள் போதுமானவையா ?
- உங்கள் கலன்களின் மீன்பிடி நடவடிக்கைகளை கட்டுப்படுத்த உங்கள் சட்டம் மற்றும் முறைகளால் இயலுமா ?
- உங்கள் நாட்டைச் சேர்ந்தவர் (பிரஜை அல்லது நிறுவனங்கள்) பிற நாடுகளில் பதிவு செய்யப்பட்ட கலன்களின் உரிமையாளர் அல்லது அந்நிய நாட்டு மீன்பிடிகலன்களில் கப்பல் தலைவராக பணியாற்றும் நிலையில் அவர்கள் சஅக மீன்பிடிப்பு மேற்கொண்டால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க உங்கள் சட்டம் மற்றும் முறைகள் அனுமதிக்குமா ?
- அந்நிய கலன்களை உங்கள் பகுதியில் மீன்பிடிக்க அனுமதிக்கும் நிலையில் சஅக மீன் பிடிப்பு பிரச்சனைகளைச் சமாளித்து ஒப்பந்தங்கள் மீன்பிடிப்பை பலப்படுத்துமா ?
- அந்நிய நாட்டு கலன்கள் உங்கள் துறைமுகங்களில் மீன்களை இறக்கவோ அல்லது வேறுகப்பல்களுக்கு மாற்றவோ அனுமதிக்கும் நிலையில், உதாரணமாக, ஆய்வுகள், கண்காணிக்க உங்கள் சட்டம் மற்றும் முறைகள் அனுமதிக்குமா ?

சஅக மீன் பிடிப்போர் பார்வையில் படுவதைத் தவிர்த்து விட முயற்சிப்பர். எச்சரிக்கை கட்டுப்பாடு இல்லாத பகுதிகளில் செயல்படும் சஅக மீன்பிடிப்பிற்கு எதிராகப் பயன்படுத்த ப.செ.தி.ந.-ச.அ க பல்வேறு எககக சாதனங்களை விளக்குகிறது.

- கலன் எச்சரிக்கை அமைப்புகள்
- பார்வையாளர் திட்டங்கள்
- மீன்பிடிப்பை ஆவணப்படுத்தும் திட்டங்கள்
- துறைமுகத்திலும் கடலிலும் கலன்களை ஆய்வு செய்தல்



- சஅக மீன்பிடிப்பில் ஈடுபடும் என சந்தேகத்திற்குள்ளான கலன்களின் உரிமைகளை அல்லது அவை துறைமுகம் அடைதலை மறுத்தல்


- மற்றும் பிற.

கள அமைப்பு, எகக கண்காணித்தலை ஊக்குவிக்கும் சாதனமாகும். கள அமைப்பை பயன்படுத்தும் கலன்களின் இருப்பிடத்தை, எளிதில் நாடுகள் அறியமுடியும். மீன்வளநிர்வாகத்தினருக்கு விரைவாகவும் செலவின்றியும், கலன்களும் கள அமைப்பை, அடிப்படையான மீன்பிடிப்பு தகவல்களை அனுப்ப, பயன்படுத்தலாம். கடலில் கலன் ஆழத்தில் இருந்தால் உதவி கேட்கலாம். தங்கள் கலன்கள், தங்கள் பகுதிகளில் மீன்பிடிக்கும் பிறநாட்டு கலன்கள் கலன் எச்சரிக்கை அமைப்புகளை பயன்படுத்தச் செய்தலைத் தொடங்கிய நாடுகளின் எண்ணிக்கை அதிகரித்துவருகிறது. சமீபகாலங்களில் கள அமைப்பின் விலையும் குறைந்துள்ளது. அனைத்து நாடுகளும் கள அமைப்பை பயன்படுத்துதலை தொடங்கவோ அல்லது பயன்பாட்டை பரவலாக்கவோ கருதுகின்றன. உதவிக்காக உ.வே அமைப்பு தொழில்நுட்ப வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது. உவே இணையதளத்தில் இவற்றைப் பெறலாம்.

அரசுகள், மீன்பிடிப்போர், மீன்பிடிப்பு விதிகளுக்கு இணங்கிட, உறுதியான நடவடிக்கை மூலம் ஊக்குவிக்க வேண்டும்.

- மீன்பிடிப்போருக்கு சமுதாயக்கல்வி மற்றும் பிற விஞ்சுதல்

- மீன்பிடிப்பு விதிகளை ஊக்குவிப்பதில் உபயோகிப்போர் கலந்து கொள்வதை உறுதி செய்தல்



➢ இணக்கத்திற்கு சாதகமாக கூர்மையான நெருக்கடி தருதல்

➢ மீன்பிடிப்போர் உபயோகிப்பதற்கு எளிதான தகவல்களை சேகரிக்கும் அமைப்புகளை ஏற்படுத்துதல்.

விதிகளை மீறும் மீன்பிடிப்போர் கடுமையான தண்டனைகளை எதிர்நோக்க வேண்டும். சஅக மீன்பிடிப்பு நடைபெறுவதாக நம்பப்படும் பொழுது மீன்பிடிகலன்களை ஆய்வு செய்யவோ விசாரிக்கவோ ஏற்ற வகையில் அரசுகள் அவர்களது திறமைகளை மேம்படுத்திக் கொள்ள வேண்டும். மீறுபவர்களுக்கு எதிராக வெற்றிகரமாக வழக்கு தொடங்க வேண்டும்

மீன்வளம் குறித்த எச்சரிக்கை கட்டுப்பாடு மற்றும் கவனமான கண்காணிப்பு (எககக) நடவடிக்கைகளில் ஒன்று சேர்ந்து ஒத்துழைக்க பன்னாட்டு கூட்டு அமைப்புகளில் கலந்து கொள்வது பற்றி நாடுகள் பரிசீலிக்க வேண்டும். இந்த வலை அமைப்பு பன்னாட்டு எககக நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும். இதில் நாடுகள் சில தகவல்களை எளிதில் பெற வழி ஏற்படும். இந்த அமைப்பைப்பற்றி மேலும் கீழ்க்கண்ட இணைய தளத்தில் விபரம் அறியலாம்.

http://swr.used.edu/enf/mcs/mcs.htm

User name: mcs

Password : mcsnet

**கொடிநாடுகளின் பொறுப்புகள்**

கொடிநாடுகளின் முதன்மையான பொறுப்பு அவர்களுடைய கலன்களின், மீன்பிடிப்பு கலன்கள் மற்றும் மீன்பிடிப்பிற்கு உதவிடும் கலன்களின் மீன்பிடிப்பு நடவடிக்கைகளைக் கண்காணிப்பது. (மீன்பிடிகலன்களிலிருந்து பிடிக்கப்பட்ட மீன்களை ஏற்றிச்செல்லும் கலன்கள் மீன்பிடிகலன்களுக்குத் தேவையான எரிபொருள் மற்றும் உணவுப் பொருட்களை ஏற்றிச் செல்லும் கலன்கள் போன்ற உதவிடும் கலன்கள்). தங்கள் கலன்களின் மீதான கட்டுப்பாட்டை பலப்படுத்த உதவிடும் வகையில் நாடுகளுக்கு ப.செ.தி.ந.-ச.அ க விரிவான சரியாக வகைப்படுத்தப்பட்ட சாதனங்களை வழங்குகிறது.

இந்த சாதனங்கள் செயல்பட கொடிநாடுகளின் அரசுகள் இவற்றைச் செயல்படுத்திட வைக்கும் அரசியல் உறுதியைப்பெற்று இருக்க வேண்டும். துரதிர்ஷ்டவசமாக, பல நாடுகள் தங்கள் மீன்பிடிப்பு நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்கு எத்தகைய அடிப்படையான நடவடிக்கையும் மேற்கொள்ளாது மீன்பிடிகலன்களை பதிவு செய்கின்றன. வெற்றிகரமாக சஅக மீன்பிடிப்பு பிரச்சனைகள் விளக்கப்படும் எனில், மீன்வள பாதுகாப்பு மற்றும் மேலாண்மை மேம்படுத்தப்பட வேண்டும் எனில், இந்த நிலை மாற வேண்டும்.

மீன்பிடிகலன் பதிவு செய்தல். மீன்பிடிகலன் ஒன்றை பதிவு செய்வதற்கு முன்பாக மற்றும் கலன் தங்கள் நாட்டுக் கொடியை பறக்க விடுவதனை அனுமதிக்கும் முன்பாக ஒருநாடு அக்கலனின் மீன்பிடிப்பு நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கு அதற்கு திறமை உள்ளது என்பதனை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

பல நாடுகள் சிறு மீன்பிடிகலன்கள் பதிவு செய்தலை முழுவதுமாக தேவை என கருதுவது இல்லை எனினும் சஅக மீன்பிடிப்பு பெருகிவரும் சூழ்நிலையில் அத்தகைய சிறிய மீன் பிடிக்கலன்களையும் சேர்த்து எவ்வளவு இயலுமோ அவ்வளவு மீன்பிடிகலன்களுக்கும் குறிப்பாக அனைத்துக்கலன்களுக்கும் பதிவு தேவை என்பதற்காக அரசுகள் ஊக்கப்படுத்தப்பட வேண்டும். அவை அனைத்தும் அதன் மீன்பிடிகலன் பதிவேட்டில் கீழே விவரித்தவாறு பதிவு செய்யப்பட வேண்டும்.

மீன்பிடிகலன் சஅக மீன் பிடிப்பில் ஈடுபடுமா என்பதனை ஊகிப்பது உணருவது கடினமே. இதற்கு முன்பாக இச்செயலில் ஈடுபட்டிருக்கும் எனின், அவ்வாறே செயல்படும் என்பதற்கான வாய்ப்பு அதிகம். எனவே சஅக மீன்பிடிப்பு மேற்கொண்ட வரலாறு உடைய கலன்களை பதிவு செய்தலை நாடுகள் தவிர்க்க வேண்டும். பெயர் மற்றும் பதிவு செய்தலில் மாற்றம் தவிர்த்து அதே கலன்கள் அடிக்கடி சஅக மீன்பிடிப்பில் ஈடுபடும் என்பதனை அனுபவம் தெரிவிக்கிறது. அரசு மீன்பிடித்தலை பதிவு செய்ய கலன் உரிமையாளர் இந்த கலன் இதற்கு முன்பாக பதிவு செய்யப்பட்ட, பிற பெயர்களில் செய்யப்பட்ட பதிவுகளையும் சேர்த்து அனைத்து நாடுகளைப் பற்றிய தகவல்களை குறிப்பிட செய்தல் வேண்டும். கொடி மாற்றும் முன் மாதிரியாக தோன்றும் எனில் (அதாவது அடிக்கடி கொடிகளை மாற்றிக்கொள்ளுதல்) அக்கலன் ச அ க மீன்பிடிப்பில் பயன்படுத்தப் பட்டிருக்க இயலும். மிகக் குறைந்த அளவிலேனும் கலன் உரிமையாளர் பதிவு செய்வதில் அடிக்கடி மாற்றங்கள் உள்ளனவா என்பது பற்றி விளக்குதல் அரசுக்கு தேவையாகிறது.

*மீன்பிடிகலன்களின் பதிவேடு.* ஒவ்வொரு நாடும் தன்னுடைய நாட்டின் மீன்பிடிகலன்கள் பற்றிய பதிவேட்டை நிர்வகிக்க வேண்டும். பதிவேட்டில், கலன்களைப் பற்றிய புறத்தோற்றத்தன்மைகள் அவற்றின் மீன்பிடிப்பு வரலாறு பற்றிய விபரங்கள் குறிக்கப்படவேண்டும். மேலும் சேர்க்கப்படவேண்டியவை:

- மீன்பிடிகலனின் பெயர், பதிவு எண் முந்தைய பெயர்கள் (தெரியும் எனில்) மற்றும் பதிவு செய்யப்பட்ட துறைமுகம்.
- முந்தைய கொடி (இருப்பின்)
- பன்னாட்டு ரேடியோ அழைப்புக் குறியீடு (இருப்பின்)
- எங்கு எப்பொழுது கட்டப்பட்டது
- கலனின் வகை
- கலனின் மீன்பிடிப்பு முறை அல்லது முறைகள்
- பதிவான மொத்த எடை
- இயந்திர அல்லது இயந்திரங்களின் சக்தி
- நீளம்
- கலனின் உயரம்
- ஏரா
- பொருத்தமான இடங்களில் பதிவுசெய்யப்பட்ட பொழுதோ அல்லது சமீபத்திய பிற அமைப்பு மாற்றங்களை ஏற்படுத்தியபிறகோ எடுக்கப்பட்ட கலனின் பக்க தோற்ற புகைப்படம்
- கலன் பதிவு செய்யப்பட்ட நபர்(களின்) அல்லது நிறுவனத்தின் பெயர் முகவரி, தேசீயம்
- கலனின் நடவடிக்கைகளை நிர்வகிப்பதற்கு பொறுப்பு ஏற்கும் நிறுவனம் அல்லது நபர்(கள்) பெயர் முகவரி தேசீயம்
- கலனின் பயன்பெறும் உரிமை உடைய நிறுவனம் அல்லது நபர்(கள்) பெயர் முகவரி தேசீயம்
- கலனின் உரிமையாளர் வரலாறு. தெரியும் நிலையில் கலனின் ச அ க மீன்பிடிப்பு வரலாறு

இயலும் இடங்களில், பட்டியலிடப்பட்ட ஒவ்வொரு கலனும் மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ளதா என்ற விபரம் பதியப்பட வேண்டும்.

*மீன்பிடிக்க அங்கீகாரம்.* அரசிடமிருந்து மீன்பிடிப்பில் ஈடுபட விரைவான அங்கீகாரத்தை கலன்கள் பெறும்வரை கொடி நாடுகள் அக்கலன்கள் கடலின் எப்பகுதியிலும் மீன்பிடிப்பதைத் தவிர்க்கச் செய்தல் வேண்டும். முறையாகப் பதிவு செய்யப்பட்டு மீன்பிடிகலன்கள் பதிவேட்டில் பதிவு மேற்கொள்ளப்பட்ட கலன்களுக்கு மட்டுமே தங்கள் எல்லையில் மீன்பிடிக்க கொடி நாடு அத்தகைய அங்கீகாரத்தை வழங்க வேண்டும்.

மீன்பிடிப்பு நடவடிக்கைகளை நிர்வகிக்க கொடிநாடு அனுமதிக்கப்பட்டுள்ள அங்கீகாரத்தில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு ஏற்ப மீன்பிடிக்க உரிமையாளர்கள் அல்லது இயக்குபவர்கள் சம்மதம் தெரிவித்த பின்பே கலன்கள் மீன்பிடிக்க அங்கீகாரம் பெறும். உதாரணமாக இந்த நிபந்தனைகள் அமைப்பவையாவன:

- என்ன சிற்றின வகைகள் பிடிக்கப்படும்
- என்ன மீன்பிடிச்சாதனங்கள் பயன்படுத்தப்படும்
- எங்கு எப்பொழுது கலன்கள் இயக்கப்படும்

ப.செ.தி.ந.-ச.அ க ன் பத்தி 47 அத்தகைய பரந்த எல்லையிலான நிபந்தனைகளை எடுத்துரைக்கிறது. அவை அனைத்தும் எல்லாவித சூழ்நிலைகளிலும் செயல் படுத்தக்கூடியவை அல்ல.

கடலோர நாடு அதன் நீர்ப்பரப்பில் மீன்பிடிக்க அந்நிய நாட்டுக்கலனை அனுமதிக்கும் முன்பாக அக்கலன் அதன் கொடிநாட்டிலிருந்து அந்நாட்டின் எல்லைக்கு அப்பால் உள்ள நீர்ப்பரப்பில் மீன்பிடிக்க தனிப்பட்ட அங்கீகாரம் பெற்றுள்ளதா என்பதனை சரிபார்க்க வேண்டும்.

*பிற கண்காணிப்பு முறைகள்.* மீன்பிடிகலன்களை பதிவுசெய்தல் மீன்பிடிகலன்களின் பதிவேடுகளை ஏற்படுத்துதல், மீன்பிடிப்பு அங்கீகாரத்தை முறையாகப்பயன்படுத்துதல் போன்றவை கொடி நாட்டிற்கு முறைசார்ந்த (அல்லது சட்டரீதியான) அடிப்படையை, அதன்மீன்பிடிகலன்களின் மீன்பிடிப்பு நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்த, வழங்குகிறது. அதன் கலன்களின் மீது உண்மையான கண்காணிப்பை செய்து முடிக்க பசெதிந சஅகல் விவரிக்கப்பட்டுள்ள மாறுபட்ட செயல் முறை சாதனங்களிலிருந்து கொடிநாடு தேர்ந்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

உதாரணமாக, ஒவ்வொரு வினாடி என்று இல்லாத போதிலும் முறையாக மற்றும் வழக்கமான இடைவெளியிலேனும் உதாரணமாக ஒவ்வொரு வாரத்திலும் அதன் கலன்கள் எங்கு உள்ளன என்பதனை கொடி நாடு அறிந்திருக்க வேண்டும். கலன்களின் போக்கு அறிய சரியான சாதனங்கள் உள்ளடக்குபவையாவன. ரேடியோவில் அறிவிக்கப்படும் அதிகாரபூர்வ நிலை அறிவிப்பு, கலனின் நிலையைப்பதிவு செய்தமையுடன் கூடிய அதிகாரபூர்வமாக நிர்வகிக்கப்படும் தினசரி குறிப்புப்புத்தகம். மீன்பிடிக்க அங்கீகாரம் வழங்கப்படுவதற்கு முன்பாக கலன் இயக்குபவர்கள் இத்தேவைகளைப் பூர்த்தி செய்துதர சம்மதிப்பது அவசியமாகிறது.

துரதிர்ஷ்டவசமாக பொறுப்பான கலன் இயக்குபவர்கள் இத்தேவைகளுக்கு இணங்கும் நேரத்தில் சஅக மீன்பிடிப்போர் இதற்கு இணங்காது இருப்பர். ஆகையால் கொடிநாடு கடலில் அதன் கலன்களை இருப்பிடத்தை அறிவதற்கு மாற்று வழி வைத்திருக்க வேண்டும். மேலே விவாதித்தவாறு கஎ அமைப்பு ஒரு வழியாகும். மற்றொரு வழி பார்வையாளர்களை கலன்களில் அனுப்பி கலன்களின் இருப்பிடங்களைக் கண்காணிக்கவும் மீன்பிடி நடவடிக்கைகளை பார்வையிடவும் ஏற்பாடு செய்யலாம். தங்கள் மீன்பிடிகலன்கள் கடலில் மீன்பிடிக்கக் கூடும்

என்பதனை அறிந்து இடங்களை கண்காணிக்கும் திறனை கொடிநாடுகள் மேம்படுத்திக் கொள்ள வேண்டும்.

மீன்பிடிப்பதற்கான அங்கீகாரத்தைப் பெற ஒவ்வொரு கலனும் பன்னாட்டு அங்கீகாரம் பெற்ற உவே அமைப்பின் மீன்பிடிகலனின் அடையாளம் காணவும் குறியிடவும் வரையறுக்கப்பட்ட விவரக்குறிப்புகள் போன்ற வரையறைகளுக்கு இணங்க அடையாளம் இடப்பட வேண்டும். அடையாளம் காணவும் கண்டுபிடிக்கவும் உதவும் வழியில் மீன்பிடிச் சாதனங்களும் அடையாளம் இடப்பட வேண்டும்.

அதன் ஒவ்வொரு கலனும் என்ன மீன்களைப்பிடிக்கிறது என்பதனை அறிய கொடிநாடு வழிமுறையைப்பெற்று இருக்க வேண்டும். அதற்கு ஏற்ப, குறிப்பிட்ட இடைவேளைகளில், அதன் கலன்கள் அவற்றின் மீன்பிடிப்பு நடவடிக்கை பற்றி அறிவிப்பது கொடிநாடுகளுக்கு தேவையாகிறது. களஅு ரேடியோ, தொலையச்சு முறைகள் அறிக்கை அனுப்ப சௌகரியமான காலத்தை உணர்ந்த முறைகள் ஆகும். கட்டாயமாக தினசரி குறிப்பு புத்தகத்தின் மூலமாக மீன்பிடிப்பை அறிவிப்பது வழக்கமானது. பிற முறைகளும் உள்ளன.

அறிவிக்கப்பட வேண்டிய விபரம் மீன்வளம் ஒவ்வொன்றிற்கும் வேறுபடும் எனினும் காலத்தோடு குறைந்த அளவிலேனும் தங்கள் கலன்கள் அறிவிப்பது கொடி நாடுகளுக்கு அவசியமாகிறது. அறுவடை நடைபெறும் பொழுது மீன்வள நடவடிக்கை குறித்த முழுமையான மற்றும் சரியான விபரங்கள் கீழ்க்கண்டவை உட்பட தேவையாகிறது.

- கலன் அடையாளம் (ரேடியோ அழைப்புக் குறியீடு துறைமுகம் பதிவு எண்)
- கலனின் நிலை
- கலனின் போக்கு
- மீன்பிடி முயற்சி (மீன்பிடிப்பு நிகழும் இடம் மீன்பிடி மேற்கொண்ட இடம் நேரம் தேதி)
- பிடிக்கப்பட்ட மீன்களின் வகை (இலக்கு மற்றும் இலக்கு அற்ற சிற்றின வகைகள்) பொதுவான எடையுடன் (பிடித்து இறக்கப்படும் போது உள்ள உயிருடன் எடைக்குச் சமமான)
- மண்டலத்திற்குள் நுழைதல் வெளியேறுதல் (மூடப்பட்ட பகுதிகளுக்குள் நுழைதல் வெளியேறுதல் உட்பட) அறிவிக்கைகள் மற்றும்
- துறைமுகத்திற்குள் நுழைவு அறிவிக்கைகள்

கொடிநாடுகள் அறிவிக்கப்பட்ட விபரங்கள் சரியாக உள்ளதா என்பதனை சரிபார்க்கக் கூடியதாக இருக்க வேண்டும். அறிக்கை அனுப்பதவறுவது தவறான அறிக்கை அனுப்புவது ஆகியவற்றிற்கு தண்டனை வழங்க வேண்டும் துறைமுகத்தில் வழக்கமான ஆய்வுகள் மற்றும் கலன்களில் ஏறி சென்று கண்காணிக்க தனிப்பட்ட பார்வையாளர்கள் உபயோகம் ஆகியவற்றை அணுகு முறைகள் உள்ளடக்க வேண்டும்.

மேலே விவரித்தவாறு சஅக மீன்பிடிப்பிற்கு போதுமான அளவில் கடுமையான தண்டனைகள் வழங்கப்படுவதை, கொடிநாடுகள் உறுதிசெய்ய வேண்டும். கடுமையான குற்றங்களுக்கு மீன்பிடிப்பதற்கான அங்கீகாரத்தை நிறுத்தி வைத்தல் விலக்குதல் போன்றவற்றை அத்தகைய அனுமதி உள்ளடக்க வேண்டும். கலனின் தலைவர் மற்றும் பிற அலுவலர்களுக்கு பொருந்தும் அப்பதவிகளில் பணியாற்றுவதற்கான அங்கீகாரத்தை வழங்குதலையோ நிறுத்திவைத்தலையோ உள்ளடக்க வேண்டும். சஅக மீன்பிடிப்பில் ஈடுபடுவோரை அதைரியப்படுத்தும் வகையில் கடினமான தண்டனைகள் தேவைப்படுகின்றன.

### கடலோர நாடுகளின் பொறுப்புகள்

கடலோர நாடுகளின் கண்காணிப்பில் உள்ள பகுதிகளில் இருந்தே சர்வ தேச மீன்பிடிப்பில் 90 சதவிகிதத்திற்கு மேல் மீன்கள் பிடிக்கப்படுகிறது. இப்பகுதிகளிலும் சஅக மீன்பிடிப்பு குறிப்பிடக்கூடிய விதத்தில் நடைபெறுகிறது. மிகப் பெரும்பான்மையான சஅக மீன்பிடிப்பு, கடலோா நாடுகளால் பதிவு செய்யப்பட்ட கலன்கள் மூலமாகவே நடைபெறுகிறது. குறிப்பாக அறிவிக்கப்படாது அல்லது தவறாக அறிவிப்பது மூலமாக நடைபெறுகிறது. பிறநிகழ்வுகளில் அந்நியகலன்கள் கடலோர நாடுகளின் அனுமதியின்றி மீன்பிடிப்பில் ஈடுபடுகின்றன. (அதாவது திருடுதல் அல்லது அத்துமீறி நுழைதல்) அல்லது கடலோர நாடுகளால் அவர்களுக்கு வழங்கப்பட்ட வழி நிபந்தனைகளை மீறி மீன்பிடிப்பில் ஈடுபடுகின்றன.

இப்பகுதியில் சஅக மீன்பிடிப்பு, குறிப்பாக அங்கு இயங்கும் பொறுப்பான மீன்பிடிப்போர் மற்றும் கடலோர நாடுகளுக்கு, முதலாவதாக தீங்கு ஏற்படுத்துகிறது. ஆகையால் அவர்களுடைய பகுதிகளில் தற்சமயம் மற்றும் எதிர்காலத்திலும் நேரிடையாக மிகுந்த பயன்களைக்குவிப்பதால் சஅக மீன்பிடிப்பை நிறுத்த முடிந்த அனைத்தையும் கடலோர நாடுகள் செய்ய வேண்டும்.

சஅக மீன்பிடிப்பில் ஈடுபடும் கலன் கடலோர நாட்டில் பதிவு செய்யப்பட்டிருப்பின் அதுவே கொடிநாடாகும். அத்தகைய கலன்களை சமாளிக்க முந்தைய பிரிவுகளில் கூறப்பட்ட சாதனங்களை அந்தநாடு பயன்படுத்த வேண்டும்.

சஅக மீன்பிடிப்பில் ஈடுபடும் கலன் அந்நிய நாட்டில் பதிவு செய்யப்பட்டிருந்தால் கடலோர நாடு அதன்பயன்பாட்டிற்காக கூடுதலாக பல சாதனங்களைப்பெற்றுள்ளன. அதில் அடங்குபவை:


- அதன் நீர்ப்பகுதிகளில் மீன்பிடிக்க அங்கீகாரம் பெற்ற அந்நியக்கலன்களின் பதிவேட்டை நிர்வகித்தல்.
- அந்நியக்கலன்கள் கள அமைப்பை பயன்படுத்துவதை தேவையாக்குதல். அதனால் கடலோர நாடு உடனடியாக அல்லது குறைந்த நேரத்தில் கலன்களின் இருப்பிடத்தை அடைதல் கள அமைப்பின் மூலம் ஒழுங்காக விவர அறிக்கைகளைப் பெறுதல்.
- அந்நியக்கலன்கள் முழுதுமாக அல்லது குறிப்பிட்ட சதவிகிதத்தில் பார்வையாளர்களை ஏற்றிச் செல்வதை தேவையாக்குதல்.

கொடிநாடுகள் சஅக மீன்பிடிப்பு வரலாறு உடைய கலன்களைப்பதிவு செய்தலைத் தவிர்ப்பது போல், கடலோர நாடுகளும் அவ்வாறே அவைகளுக்கு வழி வழங்கிடுதலைத் தவிர்க்க வேண்டும். செய்முறையாக கடலோர நாடு கொடியுடைய நாடுகளிடம் அவற்றின் உரிமம்பெற்ற கலன்கள் சஅக மீன்பிடிப்பு வரலாறு இல்லாத கலன்கள் என்பதனை உரிமம் வழங்குபதற்கு முன்பே உறுதி செய்திட கோருதல் வேண்டும்.

தனது நீர்ப்பரப்பில் மீன்பிடிக்க விரும்பும் எந்த ஒருகலனின் கொடி நாட்டுடனும் கடலோர நாடு முறையான ஒப்பந்தத்தை மேற்கொள்ள வேண்டும். வழிவழங்கப்பட்ட தங்கள் கலன்களால் மேற்கொள்ளப்படும் மீன்பிடிப்பு நடவடிக்கைகள் குறித்த கொடிநாடுகளின் பொறுப்புகள் தொடர்வதை இந்த ஒப்பந்தம் தெளிவாக்கும். குறைந்த அளவிலேனும், வழக்கமான ஒப்பந்தம் மற்றும் நிபந்தனைகளை மீறும் கலன்களைத் தண்டிக்கும் பொறுப்பை ஒப்பந்தம் ஏற்படுத்தும். கடலோர நாடு மேற்கொள்ளும் எககக முயற்சிகளில் கொடிநாடு உதவும் பொறுப்பை ஒப்பந்தம் ஏற்படுத்தும்.

கடலில் கப்பலுக்கு கப்பல் மாற்று வதை கண்காணிப்பது கடினம் என்பதால் சஅக மீன்பிடிப்போர் துறைமுகத்தைவிட கடலில்தான் கப்பலுக்கு மாற்றுவதை விரும்புவர். கப்பலுக்கு மாற்றுவது அனைத்தும் துறைமுகத்தில்தான் நடைபெற வேண்டும் அல்லது குறைந்த அளவில்

கடலில் கப்பலுக்கு மாற்றுவது உரிய கண்காணிப்புக்கு இணக்கமாக, ஆய்வாளர்கள் கப்பலுக்கு மீன்கள் மாற்றப்படும் விபரங்களை சரிபார்க்கக்கூடிய இடங்களில் நடை பெற வேண்டும்.



**துறைமுகநாடுகளின் பொறுப்புகள்**

இறக்குவதற்கோ அல்லது கப்பலில் ஏற்றுவதற்கோ சஅக மீன்பிடிப்போர் தங்களது மீன்களை துறைமுகத்திற்கு கொண்டு வருவர் தெரிந்தோ அல்லது தெரியாமலோ சிலநாடுகள் இந்த நோக்கங்களுக்காக தங்கள் துறைமுகங்களைப் பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்கின்றன. பிறநாடுகள் தாமாகவோ அல்லது பிறருடன் இணைந்தோ சஅக மீன்பிடிப்பை கட்டுப்படுத்த தங்கள் துறைமுகங்களுக்கான வழியைக்கட்டுப்படுத்தி வரையறுக்க தொடங்கிவிட்டனர்.

ஒரு நாடு அவற்றின் துறைமுகங்கள் மீது முழு உரிமை கொண்டுள்ளது. பொதுவாக ஒரு நாடு:

- தங்கள் துறைமுகங்களுக்கு அந்நிய கலன்கள் வருகையை மறுக்கலாம் (துயர் மற்றும் ஆபத்துக் காலங்களைத் தவிர்த்து)
- அந்நிய கலன்கள் தங்கள் துறைமுகங்களில் மீன்களை இறக்குவதையோ அல்லது கப்பலுக்கு மாற்றுவதையோ தடுக்கலாம்
- துறைமுகத்தை அடைய வழி கோரும் கலன்களிடம் அவற்றின் அடையாள விபரம் மீன்பிடிப்பு நடவடிக்கை பற்றிய விபரங்களைக் கோரலாம்.
- தன்னிச்சையாக தங்கள் துறைமுகங்களில் உள்ள கலன்களை ஆய்வு செய்யலாம்

தங்கள் துறைமுகத்திற்குள் வர அனுமதி கோரும் அந்நிய கலன்கள் வழங்கக்கூடியதாக நாடுகள் கருதுவது:

- துறைமுகத்திற்குள் வர போதிய முன்அறிவிப்பு
- மீன்பிடிக்க பெறப்பட்ட அங்கீகார நகல்.
- மீன்பிடிக்க மேற்கொள்ளும் பயண விபரம் மற்றும்
- தளத்தில் உள்ள மீன்களின் அளவு

போக்கு வரத்து கலன்கள் போன்ற விபரங்களை மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடும் அந்நிய கலன்கள் துறைமுகத்திற்குள் நுழைவதற்கு முன் வழங்குதல் துறைமுக நாட்டிற்கு தேவையாகிறது.


கலன்களின் மீன்பிடி நடவடிக்கைகளின் நிலையை ஆய்வு செய்யக்கூடிய துறைமுகங்களுக்கு வருவதற்கு அந்நிய மீன்பிடிக் கலன்களுக்கு நாடு அனுமதி தர வேண்டும். அத்தகைய ஆய்வுகளில் துறைமுகநாடு குறைந்தது கொடிநாடு அல்லது ஏதேனும் உரிய மண்டல மீன்வள நிறுவனங்களுக்கு வழங்க கீழ்க்கண்ட விபரங்களையாவது சேகரிக்க வேண்டும்:

- கலனின் கொடிநாடு மற்றும் அடையாள விபரங்கள்
- பெயர் தேசீயம், கலனின்தலைவர் மற்றும் மீன்பிடிப்பு நடவடிக்கையின் தலைவர் ஆகியோரது தகுதி
- மீன்பிடிசாதனம்
- தளத்தில் உள்ள மீன்கள், அவை பிடிக்கப்பட்ட இடங்கள், சிற்றினவகைகள், நிலை மற்றும் அளவு
- பொருந்தும் இடங்களில் மண்டல மீன்வள நிறுவனத்திற்கு அல்லது பன்னாட்டு ஒப்பந்தத்திற்கு தேவைப்படும் பிற தகவல்கள்
- இறக்கப்பட்ட மற்றும் கப்பலுக்கு மாற்றப்பட்ட அளவு

தனது துறைமுகத்தில் உள்ள ஒருகலன் சஅக மீன்பிடிப்பில் ஈடுபட்டிருக்கும் என்ற சந்தேகம் ஏற்படுவதற்கு போதிய ஆதாரம் துறைமுக நாட்டிற்கு இருப்பின் துறைமுக நாடு:

- அதன் துறைமுகத்தில் அக்கலன் மீன்களை இறக்குதலையோ அல்லது கப்பலுக்கு மாற்றுதலையோ அனுமதித்தல் கூடாது
- கொடிநாட்டிற்கு உடனடியாக இத்தகவலை அறிவிக்க வேண்டும் மற்றும்
- சந்தேகிக்கப்பட்ட சஅக மீன்பிடிப்பு நடவடிக்கை பிற நாட்டின் நீர்ப்பரப்பில் மேற்கொள்ளப்பட்டு இருக்கும் எனில் உடனடியாக அந்த நாட்டிற்கோ அல்லது நிறுவனத்திற்கோ தகவல் தெரிவிக்க வேண்டும்.

கொடிநாட்டின் கோரிக்கைப்படி அல்லது சம்மதப்படி துறைமுக நாடு அக்கலன் மற்றும் அதனை இயக்குவோர் மீது கூடுதல் நடவடிக்கையும் மேற்கொள்ளலாம்.



**சந்தை முறைகள்**


சமீபத்திய பத்து ஆண்டுகளில் குறிப்பிடும்விதத்தில், மீன்வளத்தில் பன்னாட்டு வர்த்தகம் வளர்ந்துள்ளது. சஅகமீன்பிடிப்பின் மூலமாக பன்னாட்டு வர்த்தகத்தில் எவ்வளவு மீன்கள் விற்கப்பட்டிருக்கும் என்பதனை யாரும் அறிந்திலர். எனினும், மிகவும் வழக்கமாக சூரை, ஸ்வோர்ட் போன்ற வற்றையும் சேர்த்து மதிப்பு வாய்ந்த பல மீன்வகை சிற்றினங்கள் வர்த்தகத்தில் இருந்திருக்கும். அவைகளும் சஅக மீன்பிடிப்போரின் இலக்கில் உள்ள சிற்றினங்கள் என அறியப்படுகிறது.

சஅக மீன்பிடிப்பில் கிடைத்த மீன்களை பன்னாட்டு வர்த்தகத்தில் கட்டுப்படுத்த சில கூட்டு முயற்சிகள் ஏற்கனவே மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. சஅகமீன்பிடிப்பை நிறுத்த, பசெதிந–சஅக நாடுகளை பன்னாட்டு வர்த்தகம் தொடர்பாக முக்கிய பகுதியாகக் கொண்டு இருக்கும் விதிகளுக்கு கூடுதலாக ஏற்றுக்கொள்ளப்பட்ட சந்தை தொடர்பான முறைகளை ஏற்படுத்த கோருகிறது. இதன் நோக்கமே சஅக மீன்பிடிப்பில் பிடிக்கப்பட்ட மீன்கள் பன்னாட்டு வர்த்தகத்தில் விற்பனையைத் தடுப்பதே. பிறமீன்களை வர்த்தகம் செய்வதில் தேவையற்ற முட்டுக்கட்டைகளை ஏற்படுத்துவது அல்ல.

பொருட்களின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி மீதான பல்வகை கண்காணிப்பை சந்தை தொடர்பான முறைகள் கொண்டு இருக்கும். அதில் உள்ளடங்குபவை:

- மீன்பிடிப்பு சான்றிதழ் மற்றும் வர்த்தக ஆவணதேவைகள்
- இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாடுகள் மற்றும் தடைகள்

சந்தை தொடர்பான முறைகளைப்பயன்படுத்தவும் தோற்றுவிக்கவும் ஒருங்கிணைக்கச்செய்வதில் மண்டல மீன்வள நிறுவனங்கள் முதன்மையான பங்கு கொள்ளும்.



**மண்டல மீன்வளநிறுவனங்களைப் பயன்படுத்துதல்**

சஅக மீன்பிடிப்பை நிறுத்துவதில் மண்டல மீன்வள நிறுவனங்கள் மையப்பங்கு பெறுகின்றன. சஅக மீன்பிடிப்பிற்குள்ளாகும் உலகின் மிக உயர்ந்த மதிப்புடைய பல வகை மீன் இருப்பு மற்றும் அந்த இருப்புகளின் பல்வேறு எண்ணிக்கை மண்டல மீன்வள நிறுவனங்களால் ஒழுங்கு படுத்தப்படுகின்றன. எனவே பசெதிந– சஅக நிறைவேற்ற, முயற்சிகளை ஒருங்கிணைக்கவும், மேம்படுத்தவும் மண்டல மீன்வள நிறுவனங்கள் தனித்தன்மையில் நிலை நிறுத்தப்படுகிறது.

மண்டல மீன்வளநிறுவனங்கள் செய்யக்கூடியவற்றுள் சில :

- சஅகமீன் பிடிப்பு தொடர்பாக விபரங்களைச் சேகரித்து பரப்புதல்.
- சஅக மீன்பிடிப்பில் ஈடுபடும் கலன்களை கண்டறிதல் அவற்றிற்கு எதிரான நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்.
- சஅக மீன்பிடிப்பில் எந்த நாடுகளின் கலன்கள் ஈடுபடுகின்றன என்பதனை அடையாளம் கண்டு அடையாளம் கண்ட நாடுகளை இத்தகைய போக்குகளை சீராக்கி கொள்ள வற்புறுத்துதல்.
- தொடர்பான பகுதிகளில் தேசீய உரிமையின்றி மீன்பிடிக்கும் கலன்களுக்கு எதிராக உறுப்பினர்களிடம் வேண்டுகோள் விடுத்தல்.
- சஅக மீன்பிடிப்பிற்கு கொண்டு செல்லாதவாறு கலன்களின் போக்கை அமைப்பதை உறுதி செய்ய விதிகளைப் பின்பற்றுதல்.
- துறைமுக ஆய்வுத்திட்டங்களைப் பின்பற்றுதல் கடலில் கப்பலுக்கு மாற்றுவது மீதான கட்டுப்பாடுகள் தொடர்புடைய பகுதியில் உறுப்பினர் அல்லாத கலன்கள் பிடித்த மீன்களை உறுப்பினர்களின் துறைமுகத்தில் இறக்குவதற்கு அனுமதி வழங்காது இருக்க உத்தேசமான திட்டங்கள்.
- மீன்பிடித்தலுக்கான சான்றளிப்பை பின்பற்றுதல் மற்றும் அல்லாத வர்த்தக ஆவணதிட்டங்கள் மற்றும்
- சஅக மீன்பிடிப்பை எதிர்த்து போராடுவதற்கு பிற சந்தை தொடர்பான முறைகளைப் பின்பற்றுதல்.

**வளரும் நாடுகளுக்கான தனித்தேவைகள்**

வளரும் நாடுகள் குறிப்பாக வளரும் சிறு தீவு நாடுகள் மற்றும் பிற வளரும் கடலோரநாடுகள் ச அ க மீன்பிடிப்பால் பெரிதும் துயர்அடையும் நாடுகளில் அடங்கும். மீன்வள விதிகளை திறமையுடன் செயல்படுத்தி, கண்காணிக்க உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் ஆதாரங்களை பல வளரும் நாடுகள் குறைவாகப் பெற்றுள்ளன.

இதன் விளைவாக சஅக மீன்பிடிப்போர் அவர்களது நடவடிக்கைகளை வளரும் நாடுகளின் நீர்ப்பரப்பில் மேற்கொள்கின்றனர். அவர்களாகவே வளரும் நாடுகளில் பதிவு செய்யப்பட்ட கலன்களைப் பயன்படுத்துகின்றனர் (உரிமம் இன்றி மீன்பிடிப்பு மேற்கொள்கின்றனர் அல்லது உரிமம் குறிக்கும் கட்டுப்பாடுகளை மீறுகின்றனர்) பிறநாடுகளில் பதிவு செய்யப்பட்ட கலன்களைப்பயன்படுத்துகின்றனர் (திருடுதல் அல்லது வழி பெற குறிப்பிடப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை மீறி மீன்பிடிப்பில் ஈடுபடுகின்றனர்).

பொருத்தமான இடங்களில், பயிற்சிக்கும் கொண்டு இருக்கும் திறனை மேம்படுத்துவதற்கும் ஆதரவாக பசெதிந– சஅக உவே அமைப்பின் உதவியோடும் மற்றும் நுட்பங்களின் உதவியோடும் நாடுகளுக்கு வேண்டுகோள் விடுகிறது. பசெதிந சஅக கீழ் அவற்றின் பொறுப்புகளை முழுதுமாக சந்திக்க ஏதுவாக நிதி, தொழில் நுட்பம் மற்றும் பிற உதவிகள் அளிக்க கருதுகிறது. அத்தகைய உதவிகள் குறிப்பாக கீழே விவரிக்கப்படும் தேசீய திட்டங்களின் நடவடிக்கையை செயலாற்றவும் மற்றும் வளர்ச்சிபெறவும், வளரும் நாடுகளுக்கு வழிப்படுத்தப்பட வேண்டும்.

**தேசீய திட்டங்களின் நடவடக்கைகள்**

மார்ச் 2004க்குப்பிறகு அல்லது எவ்வளவு விரைவாக இயலுமோ அவ்வளவு விரைவில் பசெதிந– சஅக அதன் நோக்கங்களை மேலும் அடைய நாடுகள் தேசீய திட்டங்களின் நடவடிக்கையை ஏற்படுத்தி பின்பற்றிட பசெதிந– சஅக நாடுகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது. மேலே குறிப்பிட்டவாறு பசெதிந– சஅக ஒருசாதனப்பெட்டி சஅக எதிராகப் போராட பல்வேறு சூழ்நிலைகளில் பயன்படுத்திட பல் வகையான சாதனங்கள் உள்ளன. ஒவ்வொரு நாடும் பயன்படுத்த சாதனப்பெட்டியில் உள்ள அனைத்து சாதனங்களும் பொருத்தமானது அல்ல. இயன்றவரை, ஒவ்வொரு நாட்டின் தேசீய திட்ட நடவடிக்கை குறைந்தது, அந்த நாடு ஈடுபட்டிருக்கும் மீன்வளத்தில் அடிப்படை சாதனம் ஒவ்வொன்றும் எவ்வாறு பயன்படுத்தப்பட வேண்டும் என்பதையாவது கருத்தில் கொள்ள வேண்டும்.

நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நாடுகள் அவர்களின் தேசீய திட்டங்களின் நடவடிக்கையை ஆய்வு செய்வது தேவை என பசெதிந– சஅக கருதுகிறது. பசெதிந– சஅக மற்றும் அவர்களின் திட்டங்கள் செயல் படுத்த கொண்டுள்ள வழிமுறைகளைப்பற்றி உவே அமைப்பிற்கு அறிவிக்க வேண்டும்.

**உவே என்ன செய்யும் ?**

பசெதிந– சஅக செயலாற்ற உவே அமைப்பு தொழில் நுட்ப உதவிவழங்கும் சஅக மீன்பிடிப்பு பிரச்சனையை ஆய்வில் கொள்ளும். இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை பசெதிந– சஅக செயல்படுத்துதலில் ஏற்படும் முன்னேற்றத்தை உறுப்பினர் நாடுகளுக்கு உவேஅ அறிவிக்கும். அதன் உறுப்பினர்கள் உவே அமைப்பிற்கு வழங்கிய விபரங்களின் அடிப்படையில் இந்த அறிக்கைகள் இருக்கும்.

சட்டத்திற்குப் புறம்பான அறிவிக்கப்படாத கட்டுப்பாடு இல்லாத மீன்பிடிப்பை (சஅக) தடுக்க, நிறுத்த, நீக்க பன்னாட்டு செயல் திட்ட நடவடிக்கையின் முக்கிய பகுதிகளை தொழில்நுட்ப ரீதியில் அல்லாது இப்புத்தகம் விளக்குகிறது. உவே அமைப்பின் உறுப்பினர்கள் மற்றும் பிறருக்கும் உதவிடுதல் மற்றும் சஅக மீன்பிடிப்பை சமாளிக்கப் பயன்படுத்தப்படும் சாதனங்களைப் பழக்கப்படுத்துதலுமே இப்புத்தகத்தின் நோக்கமாகும். குறிப்பான சூழ்நிலைகளில் எந்த சாதனத்தைப் பயன்படுத்துவது என்பதனைத் தெரிவிக்கிறது. திறமையாக இச்சாதனங்களை எவ்வாறு பயன்படுத்துவது என்பதற்கான வழிமுறைகளை வழங்குகிறது. இப்புத்தகம் சஅக செயல்திட்ட நடவடிக்கைக்கு பதிலாக இடம்பெறுவது அல்ல, திட்டத்தில் உள்ள சில சிக்கலான விபரங்களை மீன்வளத்தைப் பயன்படுத்தும் அனைவருக்கும் எளிதாக கிடைக்கச் செய்யும் முயற்சியாக எளிமையான முறையில் வழங்குகிறது.

